**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 474/2019**
**நாள் 04/02/2025 செவ்வாய்க்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – சசிகுமார் | த/பெயர் – மாரிமுத்து |
| வயது – 40 | தொழில் – |
| விலாசம் – மீஞ்சூர் புதுநகர் | |

**முதல் விசாரணை–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்படுத்தப்பட்ட விபத்துக்கு 1 மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக ம.சா ஆ 1 முதல் ம.சா ஆ 11 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1. (1). முதல் தகவல் அறிக்கை **ம.சா ஆ 1** ஆகவும்,

(2). மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசல் **ம.சா ஆ 2** ஆகவும்,

(3). வாகன பதிவு சான்று நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,

(4). காப்பீட்டு சான்று நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா ஆ 5** ஆகவும்,

(6). விபத்து பதிவேடு நகல் **ம.சா ஆ 6** ஆகவும்,

(7). காயச்சான்று நகல் **ம.சா ஆ 7** ஆகவும்,

(8). மருத்துவ செலவு ரசீது அசல் **ம.சா ஆ 8** ஆகவும்,

(9). விபத்து வரைப்படம் நகல் **ம.சா ஆ 9** ஆகவும்,

(10). குற்றப்பத்திரிக்கை நகல் **ம.சா ஆ 10** ஆகவும்,

(11). கதிரியக்கப்படங்கள் அசல் **ம.சா ஆ 11** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் எனக்கு சொந்தமான புல்லட் வண்டியில் சென்றேன். நான் மீஞ்சூர் பி.டி.ஓ அலுவலகம் அருகே சென்றுக்கொண்டிருந்த போது பின்னால் வந்த கார் வேகமாக மோதி விபத்து ஏற்ப்படுத்தியது. விபத்து நடந்த இடத்திற்கு அருகே வேகத்தடையோ வளைவோ இல்லை. முதலில் காவல் நிலையம், பிறகு பி.டி.ஓ அலுவலகம் பின்னர் தான் விபத்து நடந்த இடம் உள்ளது. விபத்து 22.04.2019 இரவு 09.25 மணிக்கு விபத்து நடந்தது. விபத்து நடந்த சமயத்தில் போகுவதற்கு ஒரு வழியும், வருவதற்கு ஒரு வழியும் இடையே தடுப்பு சுவரும் இருந்தது. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் வளைவு இருந்ததால் நான் தான் அதனை கவணிக்காமல் வாகனத்தை வேகமாக ஓட்டிவந்து விபத்தை ஏற்ப்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தால் எனக்கு இடுப்பு, முதுகு தண்டுவடம், இடது தோல் பட்டை மற்றும் விளாஎலும்பு ஆகியவற்றில் காயம் ஏற்ப்பட்டது. தோல்பட்டையில் எனக்கு தகடு பொருத்தப்பட்டுள்ளது. அதிலிருந்து என்னால் இடது கை தூக்கமுடியவில்லை. விளாஎலும்பு 4 உடைந்துவிட்டது. தற்போது மேல் காயம் ஆறிவிட்டது. உட்காயங்கள் ஆராமல் தான் உள்ளது. நான் அரிசி வியபாரம் செய்து வந்தேன். எனது வயது, தொழில், வருமானம் குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் உதவி சிகிச்சை மீஞ்சூர் வெங்கட் ரத்தினம் மருத்துவமனையிலும் மேற்சிகிச்சை திருவொற்றியூர் ஆகாஷ் மருத்துவமனையிலும் பெற்றேன். எனது மனைவி என்னுடன்

இருந்ததால் 10 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்தார். எனக்கு 5 நாட்கள் மட்டுமே உள்நோயாளியாக சிகிச்சை அளித்ததாக மருத்துவ சான்றில் கூறியுள்ள நிலையில் இழப்பீடு பெறுவதற்காக ஒரு வாரம் சிகிச்சை பெற்றதாக மிகை படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல். நான் 15 லட்சம் நஷ்ட ஈடு கோரியுள்ளேன். நான் அதிகபடியான நஷ்ட ஈடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவணக்குறைவால் ஏற்ப்படதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**